மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஒரு மாவட்டமாகும். அது உண்மைதான். அங்கிருக்கும் மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே நல்ல கல்வி நிலையை உருவாக்குவதற்கு அரசு பல்வேறு முனைப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தருமபுரி மாவட்டத்தில் நான்கு அரசு கலைக் கல்லூரிகள் செயல்படுகின்றன. தருமபுரி, கிருஷ்ணகிரியில் இருக்கின்றது. அதேபோல பர்கூரில்கூட ஒரு கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரியானது அரூருக்கு அருகில் இருக்கிறது. கிருஷ்ணகிரிகூட பர்கூர் அருகிலுள்ள ஒரு பகுதிதான். பிறகு சேலத்திலேயிருந்தும் அந்த மாவட்டத்திற்கு மாணவர்கள் செல்வது உண்மைதான். அதோடு அரூரில் சுயநிதிக் கல்லூரி ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, பெண்களுக்காக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே இப்போது இருக்கும் பொருளாதார நிலையைக் கொண்டு இந்த ஆண்டு அங்கு ஆரம்பிப்பதற்கு எந்த வாய்ப்பும் கிடையாது. நமது அரசினுடைய நிதிநிலை முன்னேற்றமடைந்தால், நல்ல வாய்ப்பு ஏற்பட்டால் அதற்கு ஏற்றாற்போல் கோரிக்கையின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 323, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

323—

பட்டயப் படிப்பு

***5465—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரம், சிற்பக் கலைக் கல்லூரியில் பட்டயப் படிப்புகளை கல்லூரி நிருவாகம் அகற்றியது அரசின் கவனத்திற்குத் தெரியுமா?

(ஆ) மீண்டும் பட்டயப் படிப்பைக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

2002 மே 9]

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். அரசாணை (நிலை) எண் 196, தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறை, நாள் 23-7-1997-ன்படி, பழைய பட்டயப் படிப்பு கைவிடப்பட்டு, புதிய நான்காண்டு பட்டப் படிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

(ஆ) தேவை எழவில்லை.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தில் இருக்கின்ற சிற்பக் கலைக் கல்லூரியானது, பல்லவர் காலச் சிற்பக் கலைநகராக இருக்கிற மாமல்லபுரத்தில் அந்தச் சிற்பக் கலைகளை மேலும் ஊக்குவிக்கும் நோக்கத்திலே 1957-லே முதன் முதலாக Certificate Course-ஆக அது ஆரம்பிக்கப்பட்டது. பிறகு 1975-லே பட்டயப் படிப்பையும் அங்கே சிற்பக் கலைக் கல்லூரியிலே ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படி ஆரம்பித்த காரணத்தினால் அந்தப் பகுதியிலே இன்றைக்கு 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட சிற்பிகளுக்கு கற்சிற்பம், உலோகச் சிற்பம், மரச் சிற்பம், சுதைச் சிற்பம், Painting, கட்டடக் கலை என்று பல்வேறு கோணங்களிலே அங்கே கற்பிக்கப்பட்டு வந்தது. இப்போது அந்தப் பட்டயப் படிப்பு நிறுத்தப்பட்ட காரணத்தினாலே வெறுமனே Bachelor of Fine Arts and Bachelor of Architect மட்டும் அங்கே சொல்லித் தரப்படுகிறது. ஓராண்டுக்கு 30 பேர் மட்டுமே இப்போது அங்கே அந்தக் கல்வி நிலையத்திலே பயின்று வருகிறார்கள். ஏற்கெனவே பட்டயப் படிப்பிலே ஓராண்டுக்கு 35 பேர் மேற்சொன்ன அந்த ஆறு வகையான சிற்பங்கள் வடிப்பைச் செய்து கொண்டிருந்தார்கள். அதனாலே நமக்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற எட்டாவதிலேயிருந்து வந்து படிக்கின்ற மாணவர்கள் 5 ஆண்டு படிப்பாக அங்கே படித்து, அதனாலே அதிக அளவிலே கற்சிற்பங்கள் இன்றைக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியாவிலேயே பல்வேறு மாநிலங்களுக்கு அங்கே படித்தவர்கள் இன்றைக்கு சிற்பங்களைச் செய்து அனுப்புகிறார்கள். அதுமட்டுமல்லாமல் கட்டடக் கலைக்கு...

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கேளுங்கள்.

திரு. கே. ஆறுமுகம்: இது அவ்வளவு முக்கியத்துவமான கேள்வி, தலைவர் அவர்களே,

[2002 மே 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையெல்லாம் மானியக் கோரிக்கையில் பேச வேண்டியவை. நீங்கள் என்னவேண்டுமென்று கேள்வி கேளுங்கள். பட்டயப் படிப்பு கொண்டுவரப்படுமா என்று கேளுங்கள்.

திரு. கே. ஆறுமுகம்: இதிலே சுதை வேலையிலே ஈடுபட்டவர்கள் இன்றைக்கு வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று அவர்கள் பல்வேறு கோயில்களைக் கட்டுகிற வாய்ப்பு இருக்கிறது. இந்தியாவிலே பல்வேறு கோயில்களிலே சுதையால் கட்டுகிறார்கள். அதுபோல, உலோகச் சிற்பங்கள் எல்லாம் அழிந்து வருகின்றன. இந்தச் சிலை வடிப்பதெல்லாம் அழிந்து வருகிற காலக் கட்டத்திலே — இந்த பட்டயப் படிப்பிலே, அதாவது கலை ஆர்வம் அதிகமாக இருக்கின்றவர்களுக்கு படிப்பதற்குத் தோன்றாது. மேல்படிப்புக்குச் செல்லத் தோன்றாது. எனவே இந்தப் பட்டயப் படிப்பு படிப்பதன் வாயிலாகவே அந்தப் பகுதியிலே இருக்கிற ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு, அதிக அந்நியச் செலாவணி கிடைக்கிற வாய்ப்பு இருக்கிறது. எனவே மீண்டும் அந்தப் பட்டயப் படிப்பைக்கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நுண் கலைகளிலெல்லாம் கல்வி அறிவை அடிப்படையாகக் கொண்டு மட்டும் திறமை வளர்வதில்லை. சிலருக்கு இயற்கையாகவே திறமைகள் அமைந்திருக்கின்றன. அவற்றின் மூலமாக அவர்கள் சிறந்த சிற்பக் கலையைத் தருகின்ற வல்லுநர்களாக வருகின்றார்கள். இருப்பினும், ஒரு முறையான கல்வியை நாம் தரும்போது, ஒரு அடிப்படைக் கல்வியும் அதற்குத் தேவைப்படுகிறது. முன்பு சொன்னதுபோல 1957-லே ஆரம்பிக்கும்போது — Certificate Course — சான்றிதழ் பட்டப் படிப்பாகக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு 1975 ஆம் ஆண்டு முதல் பட்டயப் படிப்பு வழங்கப்பட்டது. பிறகு 1980 ஆம் ஆண்டிலிருந்து 3 ஆண்டு பட்டப் படிப்பாக மாற்றப்பட்டது. இது B.Sc. என்ற ரீதியில் கொடுக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல இங்கே பயிற்சி பெற்றவர்கள் உலக அளவில் பல இடங்களுக்குச் சென்று தங்களுடைய திறமைகளைக் காண்பிப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. அவ்வாறு இருக்கும்போது ஓர் அடிப்படையான கல்வியை நன்கு படித்திருந்தால் அவர்கள் திறமை வளர அத்தகைய ஒரு பயிற்சி தருவதன் மூலமாக, அவர்களுக்கு படிப்பைத் தருவதன் மூலமாக உலக அளவிலே அவர்கள் திறமையைக் காண்பிப்பதற்கு ஏதுவாக இருக்கிறது. ஆகவே அத்தகைய ஒரு பட்டப்

2002 மே 9]

படிப்பு தருவதன் மூலமாக, பல்கலைக்கழகத்தின் மூலம் அளிக்கப்பட்ட பட்டப் படிப்பைத் தருவதன் மூலமாக அவர்களுக்கு ஒரு பெரிய மரியாதையும் கிடைக்கும். அந்த அடிப்படையைக்கொண்டுதான் மூன்று ஆண்டு பட்டப் படிப்பாகக் கொண்டுவரப்பட்டது.

அதற்குப் பிறகு All India Council for Technical Education என்று இருக்கிறது. இத்தகைய தொழில்நுட்ப கல்விகளையெல்லாம் தரும்போது அவர்கள் சில வரைமுறைகளை வகுக்கின்றார்கள். ஆகவே அகில இந்திய அளவில் இந்தக் கல்வி நிறுவனத்திற்கு ஒரு மதிப்பு தர வேண்டும், அதற்கு அந்தஸ்து தர வேண்டும் என்பதற்காக அதன் அடிப்படையில் நான்கு ஆண்டு பட்டப் படிப்பு கொண்டுவந்து இருக்கிறோம். ஆகவே நான்கு ஆண்டு பட்டப் படிப்பில் 40 மாணவர்களை ஆண்டு ஒன்றுக்கு சேர்ப்பதற்காக 2000-2001-ல் தொடங்கப்பட்டு அவ்வாறு செயல்பட்டு வருகிறது. ஆகவே பட்டயப் படிப்பைக் காட்டிலும் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு மிகவும் ஏதுவாக இருக்கும் என்ற கருத்தில்தான் அரசு செயல்படுத்தி வருகிறது. அப்படி பட்டயப் படிப்பும் தேவையென்றால் அரசு அந்தப் பகுதியினுடைய சூழ்நிலைக்கு ஏற்ப அந்த நிறுவனத்தினுடைய ஆசிரியர்களைக் கலந்தாலோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம்

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இப்போது மீண்டும் அந்தப் பகுதியிலே பட்டயப் படிப்பு கொண்டுவருவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்று தெரிவித்ததற்கு நன்றியைக் கூறிக்கொண்டு, அந்தக் கல்லூரியிலே இருக்கின்ற Lecturer-கள் இன்றைக்கு அதிகமாக இருக்கிறார்கள். 35 பேர் Lecturer-களாக இருக்கிறார்கள். ஒரு முதல்வர் இருக்கிறார். அதேபோன்று ஏனைய பணியாளர்கள் 25 பேருக்கு மேல் இருக்கிறார்கள். நிருவாகச் செலவு கூடுதலாக ஆவதற்கு வாய்ப்பில்லை. எனவே மீண்டும் கொண்டுவருவதற்கான பணிகளைச் செய்வோம் என்று அறிவித்த நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 324, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.